DECEMBER 2022 **U/ID 33221/UCT5A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடை எழுதுக.

1. நற்றிணையின் அடிவரையறையை எழுதுக.

2. சுரம் என்பது எந்நிலத்தைக் குறிக்கும்.

3. பாலைத்திணைப்பாடுவதில் வல்லவர் யார்?

4. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்?

5. குறிஞ்சி நிலம் என்பது எப்பகுதி?

6. குறுந்தொகையில் கண்டோர் கூற்றை எழுதுக.

7. முல்லைக்குரிய பெரும்பொழுது யாது?

8. முல்லைத்திணையின் தெய்வம் யார்?

9. இன்னே வருகுவர் தாயர் - விளக்குக.

10. முல்லைக்குப் புறனான திணை எது?

11. பட்டினப்பாலை பெயர்க்காரணத்தை எழுதுக.

12. பத்துப்பாட்டில் பட்டினப்பாலை எத்தனையாவது பாடல்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடை எழுதுக,

13. நற்றிணைத் தலைவன் தன் நெஞ்சுக்குரைத்த செய்திகளை விளக்குக.

14. ஆயத்தோடு சேர்ந்த நற்றிணைத் தலைவி குறித்து தலைவன் கூறியவற்றை எழுதுக.

15. நறியவும் உளவோ நீ அறியும் பூவே - விளக்குக.

16. உறங்காது ஏங்கும் குறுந்தொகைத் தலைவியின் மனநிலையை விளக்குக.

17. தலைவி நோய் செய்பவள் என தலைவன் கூறும் காரணத்தை கலித்தொகை வழி எழுதுக.

18. முல்லைப் பாட்டுத் தலைவியின் மனநிலையை விளக்குக.

19. காவிரியாற்றின் வளத்தை பட்டினப்பாலை வழி விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை எழுதுக

20. நற்றிணைத் தலைவனின் களவுறவு நிகழ்வைக் கட்டுரைக்க.

21. குறுந்தொகை நாடகப்பாங்கான இலக்கியம் என்பதை நிறுவுக.

22. ஏறு தழுவலை முல்லைக்கலி வழி வெளிப்படுத்துக.

23. முல்லைப்பாட்டால் உணரலாகும் கருத்துகளை விவரிக்க.

24. பட்டினப்பாலையின் கருத்துகளைத் தொகுத்துரைக்க,

———————